# தொலைத் தொடர்க்கல்வி நிலையம், பேராதனைப் பல்கலைக்கழகம்

**இளங்கலைமானி பட்டப்பாடநெறி (புதிய பாடவிதானம்) - 200 மட்டத்தேர்வு**

**(பெப்ரவரி, 2020)**

**சமூக உளவியலின் அடிப்படை எண்ணக்கருக்கள் (SUPE, 204)**

**காலம் - 3 மணித்தியாலங்கள்**

**இவ்வினாத்தாளில் எல்லாமாக 8 வினாக்கள் காணப்படுகின்றன.**

**4 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**

1. (i) சமூக உளவியல் என்றால் என்ன? (5 புள்ளிகள்)

   (ii) "மாறிக்கொண்டும், வளர்ந்து கொண்டும் வரும் ஒரு பாடமாக" சமூக உளவியலை அறிமுகப்படுத்துவதற்கான காரணங்கள் யாவை? (8 புள்ளிகள்)

   (iii) "தற்கால இலங்கைச் சமூகத்திற்கு சமூக உளவியலாளர்களின் சேவை இன்றியமையாததாகும்." இக்கூற்றுடன் நீர் எந்தளவு தூரம் உடன்படுகின்றீர்? உதாரணங்களுடன் கலந்துரையாடுக. (12 புள்ளிகள்)

2. (i) அன்பு (Love) என்பதன் ஊடாக நீர் கருதுவது யாது? (4 புள்ளிகள்)

   (ii) அன்பின் ஐந்து வகைகளை சுருக்கமாக விளக்குக. (8 புள்ளிகள்)

   (iii) பிரத்தியேக வகுப்பொன்றில் கற்கும் மாணவர்களை காதல் விவகாரங்களுக்கு இட்டுச்செல்லும் சமூக உளவியல் காரணிகளை உதாரணங்களுடன் கலந்துரையாடுக. (13 புள்ளிகள்)

3. (i) 'இணக்கம்' என்ற எண்ணக்கருவை வரையறுக்குக. (5 புள்ளிகள்)

   (ii) அடிப்படை ஆய்வுகளுக்கிணங்க இணக்கத்தை ஏற்படுத்தும் மூன்று காரணிகள் யாவை? (8 புள்ளிகள்)

   (iii) ஒரு நிறுவனத்தின் ஊழியர்கள் அவர்களது தலைமை அதிகாரியின் கருத்துக்களுக்கு இணங்கிப் போவதற்கான சமூக உளவியல் சார் காரணங்களை உதாரணங்களுடன் கலந்துரையாடுக. (12 புள்ளிகள்)

4. (i) மனப்பாங்கு என்றால் என்ன? (4 புள்ளிகள்)

   (ii) ஒரு நபரின் மனப்பாங்குகளை வடிவமைப்பதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

   (iii) தற்கால இலங்கை அரசியல்வாதிகள் வாக்காளர்களின் மனப்பாங்குகளை மாற்றுவதற்கு பயன்படுத்தும் சமூக உளவியல் உபாயங்கள் யாவை? (15 புள்ளிகள்)

**Contd...**

5. (i) வலியத்தாக்கல் நடத்தையின் இரு வகைகள் யாவை? (5 புள்ளிகள்)

(ii) வலியத்தாக்கலுக்கான உளவியல் அணுகுமுறை மற்றும் சமூக உளவியல் அணுகுமுறை ஆகியவற்றை சுருக்கமாக விளக்குக. (8 புள்ளிகள்)

(iii) முன்பள்ளியொன்றில் கற்கும் மாணவர்களின் வலியத்தாக்கல் நடத்தைக்கான காரணங்களை கலந்துரையாடுக. (12 புள்ளிகள்)

6. (i) முற்சாய்வு (Prejudice) என்ற எண்ணக்கருவை வரையறுக்குக. (5 புள்ளிகள்)

(ii) முற்சாய்விலிருந்து உருவாகும் எதிர்மறை நடத்தைகள் யாவை? (8 புள்ளிகள்)

(iii) இலங்கையில் பெண்களுக்கெதிரான பாரபட்சங்களை ஏற்படுத்தும் சமூக உளவியல் காரணிகளை விளக்குக. (12 புள்ளிகள்)

7. (i) 'உளவள ஆலோசனை' (Counseling) மற்றும் 'அறிவுரை' (Advice) ஆகியவற்றுக்கிடையிலான வித்தியாசம் யாது? (4 புள்ளிகள்)

(ii) நீர் கற்ற உளவள ஆலோசனையின் மூன்று வகைகளை சுருக்கமாக விளக்குக. ((6 புள்ளிகள்)

(iii) பல்கலைக்கழக மாணவர்கள் உளவள ஆலோசனைக்கான தேவையுடையவர்கள் என நீர் எண்ணுகின்றீரா? உமது விடையை உதாரணங்களுடன் கலந்துரையாடுக. (15 புள்ளிகள்)

8. கீழ்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டிற்கு (02) குறிப்பெழுதுக.

(i) வலியத்தாக்கலின் இடப்பெயர்ச்சி (Displacement of Aggression) (12.5 புள்ளிகள்)

(ii) உளவள ஆலோசகர் மற்றும் உளவள ஆலோசனை பெறுனர் (Counselor and Counselee) (12.5 புள்ளிகள்)

(iii) அழகு மற்றும் பால்நிலை (Beauty and Gender) (12.5 புள்ளிகள்)

*****